
# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர் : 11 இதழ் : 08 ஆகஸ்ட் 2025 தனிபிரதி – ரூ.20/– ஆண்டு சந்தா ரூ.200/–

Vol : 11 Issue No : 08 August 2025 Single Copy – Rs.20/– Annual Subscription Rs.200/–





HEAVEN MY OWN

# பரலோகமே என் சொந்தமே

DR. ANANDA STIRA

பரலோக அனுபவங்கள் அடங்கிய
இந்த புத்தக வெளியீட்டிற்காகவும் தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்!

# ஆசிரியர் உரை

## Dr. ஜேன் ஜாஷ்வா.



**கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, நம் மீட்பரும் இரட்சகருமாகிய நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்களை அன்போடு வாழ்த்துகிறேன். இந்த புதிய மாதத்திலும் கர்த்தருடைய கிருபையும் கர்த்தருடைய பாதுகாப்பும் உங்களுக்கு அதிகமாய் உண்டாவதாக!**

நாட்கள் செல்ல செல்ல இந்த உலகில் உள்ள நம் அனைவரின் தரமும் மோசம் அடைந்துக் கொண்டிருக்கிறது. குடும்பங்களுக்குள் வேலை ஸ்தலங்களுக்குள் பகை, பொறாமை, போட்டி மனப்பான்மை, எரிச்சல் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் ஒரு தீர்வு இல்லையென்றாலும் ஒரு நம்பிக்கை நமக்கு இருக்கிறது. அது என்ன? தேவன் நம் ஜெபங்களை கேட்கிறார். **இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள். கொலோசெயர் 4:2** இந்த பாக்கியம் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்த காரியத்திற்காகவும் நாம் இடைவிடாது ஜெபிக்கலாம். அப்போது தேவன் நமக்கு பதில் கொடுக்கிறார். அப்போஸ்தலர்கள் தங்கள் வாழ்க்கையில் எல்லாவற்றிற்காகவும் ஜெபம் செய்தார்கள். அப்போஸ்தலர்கள் கூடி ஜெபித்தபொழுது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை உணர்ந்தார்கள். பரிசுத்த ஆவியானவர் தற்சரூபமாய் அவர்கள் வாழ்வில் செயல்பட்டார். அற்புத, அடையாளங்கள் வழியாக பலமாய் வெளிப்பட்டார். இத்தகைய ஜெபத்தின் வல்லமைதான் நம் வாழ்வில் வெளிப்பட வேண்டும்.

கடந்த மாதம் நடைபெற்ற அனைத்து கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். ஆகஸ்ட் மாதம் **சேலம், நாகர்கோவில், திருநெல்வேலி, ஈரோடு மற்றும் திருச்சியில் நடைபெறயிருக்கிற அனைத்து கூட்டங்களுக்காகவும்** ஜெபியுங்கள். இந்த

ஆசிரியர்/வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா

**சந்தா விபரம்**

இந்தியா: ஆண்டு சந்தா ரூ.200/- ஆயுள் சந்தா ரூ.2000/-
வெளிநாடு: ஆண்டு சந்தா ரூ.1500/- ஆயுள் சந்தா ரூ.15000/-

காலை 8:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை
ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : +91 9488845627
தெலுங்கு: +91 9944536343
மலையாளம்: +91 9488932937

e-mail: info@mojindia.org
Website: www.ministryofjesus.in

முகவரி: அன்பரின் ஊழியம், 40 SPK தெரு, உறையூர், திருச்சி – 620 003
Address: Ministry of Jesus, 40 S.P.K. Street, Woraiyur, Trichy – 620 003

**கூட்டங்களின் வாயிலாக மக்கள் சமாதானத்தையும் இரட்சிப்பையும் கிருபையாய் பெற்றுக்கொள்ள வேண்டும்.**

ஊழியத்தின் மூலம் **மரணம் என்ற ஒரு சாட்சி அனுபவம், எங்கள் மகன் ஜோனத்தன் பாடிய புதிய பாடல்கள் அனைத்தும் நமது** Ministry of Jesus You Tube **சேனலில் வெளிவந்துள்ளது. இந்த நிகழ்ச்சிகளை பார்த்து பயனடையுங்கள். அநேகருக்கு share பண்ணுங்கள்.**

அப்பா Dr. ஆனந்த ஸ்திரா எழுதிய பரலோக அனுபங்கள் அடங்கிய **பரலோகமே என் சொந்தமே என்று புத்தகத்தை விரைவில் வெளியிட இருக்கிறோம்.** இதற்குரிய தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

நம்பிக்கை டி.வி. வாயிலாக வருகிற அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சிகளை தவறாமல் பாருங்கள். **இதுவரை பத்திரிக்கைக்குரிய வருட சந்தாவை புதுப்பிக்காதவர்கள் உடனடியாக சந்தா தொகையை அனுப்பி பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள்.**

எங்கள் அப்பா, அம்மா இருவருடைய நல்ல சுகத்திற்காகவும் ஜெபியுங்கள். அவர்களுடைய பெலவீனத்தில் கர்த்தரின் பெலன் பூரணமாய் தாங்கும்படியும் ஜெபியுங்கள். எங்கள் அனைவருடைய நல்ல சுக, பெலனுக்காகவும், பயணங்களில் தேவ பாதுகாப்பு உண்டாகவும் ஜெபியுங்கள். கர்த்தர் தாமே உங்கள் அனைவரோடும் இருப்பாராக!

**கிறிஸ்துவின் பணியில்**

Dr. **ஜேன் ஜாஷ்வா**

jane@mojindia.org





# இரைச்சல்


தேவ செய்தி

Dr. ஜேன் ஜாஷ்வா.


கிறிஸ்துவுக்குள் எனக்கன்பானவர்களே. உங்கள் ஒவ்வொருவருக்கும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த மாதத்திலும் தேவனுடைய வார்த்தைகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ள வாய்ப்பு தந்த சர்வ வல்லமையுள்ள தேவனை துதிக்கின்றேன்.

இந்த மாதத்தில் வேதத்திலிருந்து "இரைச்சல்" என்ற வார்த்தையைக் குறித்து நாம் தியானிக்க இருக்கின்றோம். இரைச்சல் என்பதை சத்தம், பெருஞ்சத்தம் (Thundering voice & Noise) என சொல்லுவோம். கடந்த ஆண்டு வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவைக் குறித்து நாம் அனைவரும் அறிவோம். அந்த நிலச்சரிவில் கல், மண், மரங்கள், வீடு அனைத்தும் தண்ணீரில் அடித்துக்கொண்டு சென்றபொழுது அங்கே பெரும் இரைச்சலின் சத்தம் தொனித்தது. நீர் அருவிகளில், பயங்கரமாக பெய்கிற மழையில் எல்லாம் இரைச்சலை கேட்கிறோம். மக்கள் அதிகமாக கூடுகிற நேரங்களில், பண்டிகை நாட்களில், கடை வீதிகளில் எல்லாம் ஒரு வித இரைச்சலை கேட்க முடியும்.

இப்படிப்பட்ட இரைச்சலைக் குறித்து வேதத்தில் என்ன கூறப்பட்டுள்ளது என்பதை அறிந்துக்கொள்வோம். **...அவருடைய சத்தம் பெருவெள்ளத்து இரைச்சலைப் போலிருந்தது. வெளி.1:15** நம் ஆண்டவரின் சத்தம் பெருவெள்ளத்தின் இரைச்சலை போல இருக்கிறது என எழுதப்பட்டுள்ளது. காதுகளால் கேட்கமுடியாத அளவிற்கு அது பயங்கரமானதாக இடி முழக்கம் போல இருக்கும். **சங்கீதம் 29-ல் கர்த்தருடைய சத்தம் வல்லமையுள்ளது, கர்த்தருடைய சத்தம் மகத்துவமுள்ளது. கர்த்தருடைய சத்தம் கேதுரு மரங்களை முறிக்கிறது, கர்த்தருடைய சத்தம் அக்கினி ஜுவாலைகளைப் பிளக்கும்** என தாவீது கர்த்தருடைய சத்தத்தைக் குறித்து எழுதியிருக்கிறான்.

அன்பானவர்களே! கர்த்தருடைய சத்தத்திற்கும் எனக்கும் என்ன சம்பந்தம், எனக்கு அது தேவையில்லையே, எனக்கு இதனால் என்ன பிரயோஜனம் என்று நீங்கள் கேட்கலாம். தம்முடைய சத்தத்தை ஒரு அடையாளமாக தம்முடைய தாசர்களுக்கு தேவன் காண்பித்து இருக்கிறார். வேதத்தில் அப்படிப்பட்ட இரைச்சல் கேட்கப்படும் பொழுது பல வித்தியாசமான காரியங்கள் நடந்ததை பார்க்கிறோம்.

## ஆசீர்வாதத்தின் இரைச்சல்

எலியா தீர்க்கதரிசியைக் குறித்து நாம் நன்கு அறிவோம். எலியா நம்மைப்போல பாடுள்ள

மனிதன். இருப்பினும் மிக வல்லமையான தீர்க்கதரிசி. அவனுடைய வார்த்தையின்படி சமாரியாவில் 3 வருடம் மழை பெய்யவில்லை. காரணம் என்னவென்றால் ஆகாப் ராஜா ஆண்டவரை விட்டு விலகி, பாகால் தெய்வத்தை வணங்கினான். ஆகாப் செய்த பல அநியாயமான காரியங்களினிமித்தம் மழை இல்லாமல் கடுமையான வறட்சி நிலவியது. நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. ராஜா பின்பற்றின தெய்வத்தையே மக்களும் பின்பற்றினர். குழந்தைகளை தேவர்களுக்கு பலியிட்டு, வேசித்தனத்தில் மக்கள் மூழ்கியிருந்தனர். ஆண்டவருடைய தீர்க்கதரிசிகளை கொலை செய்தனர்.

இந்த மழை இல்லாத சூழ்நிலையில் **1 இராஜாக்கள் 17-ம் அதிகாரத்தில் எலியாவை ஆண்டவர் காகத்தைக்கொண்டும், சாரிபாத் விதவையின் மூலமும் போஷிக்கிறார்.** மூன்று ஆண்டுகள் கழிந்தபோது பஞ்சத்தினால் வாடிய மக்களை தேவன் கண்ணோக்கினார். 1இராஜாக்கள் 18:1-46-ல் எலியா ஆகாபை சந்திக்கும்படி தேவன் கட்டளையிடுகிறார். அத்துடன் தேசத்திற்கு மழையையும் தருவேன் என வாக்குக்கொடுக்கிறார். அதற்கு முன்பாக எலியா, ராஜாவிடம் சென்று, 'கர்மேல் பர்வதத்திற்கு இஸ்ரவேல் மக்களையும், பாகாலின் தீர்க்கதரிசிகள் நானூற்றைம்பது பேரையும், யேசபேலின் பந்தியிலே சாப்பிடுகிற தோப்பு விக்கிரகத்தின் தீர்க்கதரிசிகள் நானூறு பேரையும் என்னிடத்தில் கூட்டிக்கொண்டுவர ஆட்களை அனுப்பும்' என கேட்கிறான்.

அவ்வாறு இஸ்ரவேல் மக்களும், பாகால் தீர்க்கதரிசிகளும் கர்மேல் பர்வத்திற்கு வந்தபிறகு, எலியா அவர்களை நோக்கி, இரண்டு காளைகளை கொண்டு வரும்படி சொன்னான். ஒரு காளையை அவர்கள் தெரிந்துகொண்டு, நெருப்புப் போடாமல் பலியிட விறகுகளின்மேல் அந்த பலியை வைக்கும்படி சொல்லுகிறான். 'நானும் மற்றக் காளையை அப்படியே செய்து, நெருப்புப் போடாமல் விறகுகளின்மேல் வைப்பேன். நீங்கள் உங்கள் தேவனுடைய நாமத்தைச் சொல்லி கூப்பிடுங்கள். நான் கர்த்தருடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுவேன். அப்பொழுது அக்கினியினால் உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம்' என்ற ஒரு சவாலை முன்வைக்கிறான். அதற்கு ஜனங்களெல்லாரும் இது நல்ல வார்த்தை என ஏற்றுக்கொள்கிறார்கள்.

முதலில் பாகால் தீர்க்கதரிசிகள் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட காளையை வாங்கி, அதை ஆயத்தம் செய்து, 'பாகாலே, எங்களுக்கு உத்தரவு அருளும் என்று காலை முதல் மதியம் வரை பாகாலின் நாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டார்கள். ஒரு சத்தமும் பிறக்கவில்லை. எந்த பதிலும் இல்லை. அவர்கள் கட்டின பலிபீடத்திற்கு எதிரே குதித்து ஆடினார்கள். மத்தியான வேளையிலே எலியா அவர்களைப் பரியாசம் பண்ணி, உரத்த சத்தமாய் கூப்பிடுங்கள். அவன் தேவனாமே, அவன் தியானத்தில் இருப்பான் அல்லது அலுவலாயிருப்பான் அல்லது பிரயாணம் போயிருப்பான் அல்லது தூங்கினாலும் தூங்குவான் அவனை எழுப்பவேண்டியதாய் இருக்கும் என்றான். அவர்கள் உரத்த சத்தமாய்க் கூப்பிட்டு, தங்கள் வழக்கத்தின்படியே இரத்தம் தங்கள் மேல் வடியுமட்டும் கத்திகளாலும் ஈட்டிகளாலும் தங்களைக் கீறிக்கொண்டார்கள். மத்தியான வேளை சென்றபின்பும் ஒரு சத்தமும் பிறக்கவில்லை, பாகாலிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை.

உடனே எலியா சகல ஜனங்களையும் தன்

அருகில் வரச்செய்து, தகர்க்கப்பட்ட கர்த்தருடைய பலிபீடத்தை செப்பனிடுகிறான். பலிபீடத்தைச் சுற்றிலும் ஒரு வாய்க்காலை உண்டாக்கி, விறகுகளை அடுக்கி, ஒரு காளையைச் சந்து சந்தாகத்துண்டித்துவிறகுகளின்மேல்வைத்தான். அந்த தகனபலியின்மேலும், விறகுகளின் மேலும் தண்ணீரை ஊற்றுங்கள் என்றான். மூன்று தரம் தண்ணீரை ஊற்றினார்கள். அப்பொழுது தண்ணீர் பலிபீடத்தைச் சுற்றிலும் ஓடினது, வாய்க்காலையும் தண்ணீரால் நிரப்பினான். அதன்பின் தீர்க்கதரிசியாகிய எலியா, 'தேவனாகிய கர்த்தாவே, இஸ்ரவேலிலே நீர் தேவன் என்றும், நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும், நான் இந்தக் காரியங்களையெல்லாம் உம்முடைய வார்த்தையின்படியே செய்தேன் என்பதை இந்த மக்கள் அறியட்டும். என்னைக் கேட்டருளும்' என்றான். அப்பொழுது கர்த்தரிடத்திலிருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகன பலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப் போட்டது.

ஜனங்களெல்லாரும் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து, **'கர்த்தரே தெய்வம்'** என்றார்கள். அப்பொழுது எலியா, பாகாலின் தீர்க்கதரிசிகளில் ஒருவனும் தப்பிப்போகாதபடிக்கு, அவர்களைப் பிடித்து ராஜாவின் கண்முன்னே வெட்டிப்போட்டான். அதன்பின் ஆகாபை உணவருந்தப் போகும்படி சொல்லுகிறான். ஆகாப் புறப்படுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கும்பொழுதே "எலியா தன் முகம் தன் முழங்காலில் படும் அளவு தன்னை தாழ்த்தி கர்த்தரை நோக்கி, ஆண்டவரே, மழையை கொடுங்கள், மூன்று வருடம் இந்த தேசம் வீணாகிவிட்டது என்று கெஞ்சுகிறான். வறண்டு போன அந்த தேசத்திற்காக, எல்லா ஆசீர்வாதத்தையும் இழந்து போன அந்த தேசத்திற்காக திரும்பவும் ஆசீர்வதியுங்கள் என்று கெஞ்சி ஜெபித்துவிட்டு, தன் வேலைக்காரனை பார்த்து **"போ, மேகம் தெரிகின்றதா, பார்"** என்று 6 முறை தன் வேலைக்காரனை அனுப்புகிறான். எனினும் மேகம் இல்லை. 7-வது முறை கையளவு மேகம் இருக்கிறது என்று வேலைக்காரன் எலியாவிடம் கூறுகிறான். அந்த கையளவு மேகத்தை பார்த்த உடனே எலியா நிச்சயமாக கர்த்தர் மழையை கட்டளையிடுவார்" என்று சொல்லி **"மழை உம்மைத் தடைசெய்யாதபடிக்கு இரதத்தைப் பூட்டி, போய்விடும்"** என்று வேலைக்காரன் மூலமாக ஆகாபுக்கு சொல்லி அனுப்புகிறான். அதுவரைக்கும் எலியாவை ஆகாப் நம்பவில்லை. **"அதற்குள்ளாக வானம் மேகங்களினாலும் காற்றினாலும் கறுத்து பெருமழை உண்டாயிற்று, ஆகாப் இரதத்தில் ஏறி யெஸ்ரயேலுக்குப் போனான். கர்த்தருடைய கை எலியாவின்மேல் இருந்ததினால், அவன் தன் அரையைக் கட்டிக்கொண்டு, யெஸ்ரயேலுக்கு வருமட்டாக ஆகாபுக்குமுன் ஓடினான்" (1 இராஜா. 18:45,46)** ஆகாபின் ரதத்திற்கு முன் சென்றான் என்று வேதம் குறிப்பிடுகிறது. அவ்வளவு பெலனை எலியாவிற்கு கர்த்தர் கொடுத்திருந்தார்.

ஆம், பிரியமானவர்களே, முதலில் ஆசீர்வாதமான மழை வேண்டுமென்றால் உங்கள் பலிபீடம், உங்கள் இடம், உங்கள் வாழ்க்கை சுத்தப்படுத்தப்பட வேண்டும். தேவையில்லாத காரியங்கள் நீக்கப்பட வேண்டும். உங்கள் வாழ்க்கை பரிசுத்தமாக வேண்டும். கர்த்தர் தேசத்தை எலியாவை கொண்டு சுத்திகரித்தார். சுத்திகரித்த பிறகு தான் பெருமழையின் இரைச்சல் கேட்டது. அநேக சமயங்களில் நமக்கு ஒரு வாக்குத்தத்தம்,

தீர்க்கதரிசனம் கிடைத்து விட்டது என்பதற்காக சுத்திகரிப்பை அப்படியே மறந்து போய் விடுகிறோம். யாக்கோபு 5:17-18-ல் எலியா தீர்க்கதரிசி நம்மைப் போல பாடுள்ள மனுஷனாக இருந்தும் மழை பெய்யாதபடி ஊக்கமாக ஜெபம் செய்கிறான். பிறகு மழை பெய்ய வேண்டும் என்று ஊக்கமாக ஜெபம் செய்தான். பெருமழை வந்தது. இதுதான் ஆசீர்வாதத்தின் இரைச்சல். இந்த ஆசீர்வாதத்தின் இரைச்சல் உங்கள் வீடுகளில் உங்கள் வாழ்க்கையில் வேண்டுமா? முதலில் சுத்திகரிப்பு நடைபெறவேண்டும். ஆண்டவருக்கு பிரியமில்லாத காரியங்கள் அனைத்தையும் நீக்க வேண்டும். எலியாவைப் போல ஊக்கமான ஜெபம் வேண்டும். முறுமுறுப்பு இருக்கக்கூடாது. கர்த்தர் உங்களுக்குரிய ஆசீர்வாதத்தை பெருமழையைப் போல வரச்செய்வார். ஊக்கமாக கருத்தோடு ஜெபிக்கும்பொழுது கர்த்தர் ஆசீர்வாதத்தின் பெருமழையை நிச்சயம் கட்டளையிடுவார்.

## ஜெயங்கொடுக்கும் இரைச்சல்

2சாமுவேல் 5:17-25-ல் இஸ்ரவேலின் மேல் தாவீதை ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள் என்ற செய்தியை பெலிஸ்தியர் கேள்விப்பட்டனர். உடனே பெலிஸ்தியர் கூடி தாவீது ராஜாவிற்கு விரோதமாக ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே பாளையம் இறங்கினார்கள். ஏனென்றால்தாவீதுபெரியபெரியஇராட்சஷர்களை எல்லாம் கொன்றுப்போட்டது பெலிஸ்தியருக்கு தெரியும். தாவீது இஸ்ரவேலுக்கு ராஜாவானால் நிச்சயமாக பெலிஸ்தியருக்கு அழிவு வரும் என்பதை உணர்ந்தவர் களாய், ஆரம்பத்திலேயே எப்படியாவது தாவீதை தோற்கடிக்கவேண்டும் என்று அவர்கள் முயற்சிக்கிறார்கள். இந்த சூழலில் ரெப்பாயீம் பள்ளத்தாக்கில் பெலிஸ்தியர் பரவியிருந்தார்கள். தாவீது தான் எப்போதும் செய்தது போல ஆண்டவரிடத்தில் கேட்கிறான். அப்பொழுது "கர்த்தர், போ, பெலிஸ்தரை உன் கையில் நிச்சயமாய் ஒப்புக்கொடுப்பேன்" என்கிறார். தாவீது கர்த்தரை நம்பி செல்கிறான். செல்லும்பொழுது பெலிஸ்தியர் தண்ணீர்கள் முறிந்து ஓடுவது போல முறியடிக்கப்படுகிறார்கள். தாவீது ராஜா வெற்றி பெறுகின்றான். அங்கிருந்த அஞ்ஞான பொருட்களை தாவீதும் அவன் மனுஷரும் சுட்டெரிக்கின்றார்கள். அந்த இடத்திற்கு பாகால் பிராசீம் என்று பேரிட்டான். தடைகள் எல்லாம் முறியடிக்கப்படுகிறது என்பதற்காக இந்த பெயர் வைக்கப்படுகின்றது.

ஆனாலும், **திரும்பவும் இந்த சத்துருக்கள் அதே இடத்தில் பாளையம் இறங்குகிறார்கள். (2 சாமுவேல் 5:22,23)** தாவீது சற்றும் தயங்காமல், இப்பொழுது தானே பெலிஸ்தரை ஜெயித்தோம். இவர்களை மேற்கொள்வது மிகவும் சுலபம் என்று மனதில் நினைக்காமல் மீண்டுமாக தாவீது கர்த்தரிடத்தில் விசாரிக்கின்றான். அப்பொழுது கர்த்தர் ஒரு அருமையான ஆலோசனையை தருகின்றார். **"நீ நேராய்ப் போகாமல், அவர்களுக்குப் பின்னாலே சுற்றி, முசுக்கட்டைச் செடிகளின் நுனிகளிலே இரைச்சலை நீ கேட்கும்போது, சீக்கிரமாய் எழும்பிப்போ, அப்பொழுது பெலிஸ்தரின் பாளையத்தை முறிய அடிக்க, கர்த்தராகிய நான் உனக்கு முன்பாகப் புறப்பட்டிருப்பேன்"** என்கிறார்.

இங்கு செடிகளின் நுனிகளிலே இரைச்சலை கேட்பாய் என கர்த்தர் சொல்வது மிகவும் ஆச்சரியமாக இருக்கின்றது. தமிழ் வேதாகமத்தில் செடிகள் என்றும், ஆங்கில வேதாகமத்தில் (Poplar Trees) மரம் என்றும் எழுதப்பட்டிருக்கிறது. அதாவது இந்த முசுக்கட்டை

மரங்கள் 50 அடி முதல் 100 அடி வரைக்கும் வளருகின்ற மரங்கள் என கருதப்படுகிறது. இந்த மரத்திலிருந்து பிளைவுட், தீக்குச்சிகள் எல்லாம் செய்வார்கள். அந்த செடிகளின் நுனிகளில் இருந்து இரைச்சல் கேட்கும். அந்த இரைச்சல் கேட்கும் பொழுது உடனே புறப்படு. அந்த இரைச்சலின் அர்த்தம் என்ன? கர்த்தராகிய நான் உனக்கு முன்பாக புறப்பட்டு பெலிஸ்தரை முறியடிக்க போயிருப்பேன் என்று கர்த்தர் தெளிவாக உரைக்கின்றார்.

எங்கும் போரின் இரைச்சல் இருக்கிறது. ஆனாலும் **"இலைகளின் நுனிகளில் வரும் இரைச்சலை நீ கேள். அப்பொழுது நான் கடந்து போயிருப்பேன்"** என்கிறார். போர் இரைச்சலின் மத்தியில் போர் வீரர்களின் மத்தியில் தாவீது எப்படி இந்த மெல்லிய சத்தத்தை கேட்டிருப்பான். எவ்வளவு ஆழமான நுட்பமான காரியத்தை செய்யும்படி கர்த்தர் தாவீதுக்கு சொல்லி இருக்கின்றார். அதன்படியே தாவீது செய்தான். பெலிஸ்தியரை முறியடித்து மீண்டும் வெற்றி பெற்றான்.

பிரியமானவர்களே! நன்றாக யோசித்து பாருங்கள். நம்மை சுற்றி எத்தனையோ சத்தங்களை நாம் கேட்கிறோம். உலகப்பிரகாரமான சத்தங்கள் எல்லாம் கர்த்தருடைய சத்தத்தை நாம் கேட்க முடியாத அளவிற்கு நமது காதுகளை மந்தமாக்கி விடுகின்றன. ஒரு அசுத்தமான காரியத்தை கேட்கும்பொழுது அல்லது பார்க்கும்பொழுது பரிசுத்தமான யோசனை, பரிசுத்தமான எண்ணங்கள் நமக்குள் வரவே வராது.

மேலும் இங்கே தாவீது எல்லாவற்றிற் காகவும் ஆண்டவரிடம் கேட்கிறான். அதனால் அவன் எங்கு சென்றாலும் ஜெயம்தான் கிடைத்தது. அநேக சமயங்களில் நாம் எல்லாவற்றையும் சுலபமாக எடுத்துக்கொண்டு, கர்த்தர் என்னோடு இருக்கின்றார் அதனால் நாம் என்ன செய்தாலும் கர்த்தர் என்னை ஆசீர்வதிப்பார் என்று நினைத்து, ஜெபிக்காமல், கர்த்தரிடம் ஆலோசனை கேட்காமல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். அப்படி நாம் ஒரு போதும் இருக்கக்கூடாது. கர்த்தரின் ஆலோசனைபடி, கர்த்தரின் வார்த்தைபடி நாம் செயல்படும்பொழுது தான் ஆசீர்வாதம் கிடைக்கும், ஜெயம் கிடைக்கும். இலைகளின் நுனியில் இரைச்சலை கேட்ட உடனே பெலிஸ்தருக்கு விரோதமாக தாவீது விரைந்து சென்று மிகப்பெரிய வெற்றியை கண்டடைந்தான். இன்றைக்கு நாமும் கர்த்தரின் சத்தத்திற்கு கீழ்ப்படிந்து செல்ல வேண்டும். நாம் உலகத்தின் சத்தத்தை கேட்கின்றோமா? அல்லது ஆண்டவரின் சத்தத்தை கேட்கின்றோமா? நமது செவிகள் எதற்கு திறக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களுடைய புறணி பேசும் வார்த்தைகளை கேட்டு நேரத்தை வீணாக்குகிறோமா? கர்த்தருடைய சத்தத்தை கேட்டு செயல்படு கிறோமா? நம்முடைய சின்ன சின்ன காரியங்களையும் கர்த்தரிடம் ஒப்புக்கொடுத்து, ஆண்டவரே நான் இந்த காரியத்தில் என்ன செய்ய வேண்டும் என கேட்கிறோமா? உலகப் பிரகாரமாக ஓடிக்கொண்டு, எனக்கு இந்த திறமைகள் இருக்கிறது. இந்த ஆள் பலம் இருக்கிறது என்று அவற்றை நம்பியே செயல்படுகிறோமா? என யோசித்துப்பாருங்கள். தாவீதை போல செயல்படும்பொழுது கர்த்தர் நிச்சயமாக நமக்கு ஜெயத்தை தருவார்.

**கர்த்தர் பராக்கிரமசாலியைப்போல் புறப்பட்டு, யுத்தவீரனைப் போல் வைராக்கியமூண்டு, முழங்கிக் கெர்ச்சித்து, தம்முடைய சத்துருக்களை மேற்கொள்ளுவார். (ஏசாயா 42:13)** இங்கு கர்த்தர் பராக்கிரமசாலியை

போல கெர்ச்சிப்பார் என்று சொல்லப்பட்டுள்ளது. உங்களுக்கு இருக்கிற சத்துருக்களை கர்த்தர் மேற்கொள்ள வேண்டும் என்றால் கர்த்தரிடம் உங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும். கர்த்தர் உங்களுக்கு என்ன சொல்கின்றாரோ அதை நீங்கள் அப்படியே செய்ய வேண்டும்.

**சிங்கமும் பாலசிங்கமும் தங்கள் இரையைப் பிடித்திருக்கும்போது கெர்ச்சித்து, தங்களுக்கு விரோதமாய்க் கூப்பிடுகிற திரளான மேய்ப்பரின் சத்தத்தினாலே கலங்காமலும், அவர்கள் அமளியினாலே பணியாமலும் இருக்கிறதுபோல, சேனைகளின் கர்த்தர் சீயோன் மலைக்காகவும், அதின் மேட்டுக்காகவும் யுத்தம்பண்ண இறங்குவார். ஏசாயா 31:4** சிங்கம் தன் வாயில் இருக்கும் இரையை விட்டுகொடுக்காமல் கெர்ச்சித்து போராடும். அதே போலதான் கர்த்தர் கெர்ச்சித்து போராடுவதற்கு உங்களை கர்த்தருக்கு நீங்கள் விட்டுக்கொடுக்க வேண்டும். கர்த்தரை சார்ந்து நீங்கள் வாழ வேண்டும். சத்துருக்களை மேற்கொள்ளும் இரைச்சலாக கர்த்தர் உங்களுக்கு முன்பாக கடந்து செல்வார். எனக்கு சத்துருக்களே இல்லை என்று சொல்லாதீர்கள். பிசாசு கெர்ச்சிக்கிற சிங்கத்தை போல ஒவ்வொரு நாளும் உங்களுக்கு விரோதமாக போராடிக்கொண்டிருக்கிறான்.

ஆகவே நீங்கள் கர்த்தருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிகின்றீர்களா? அவருடைய சத்தத்தை கேட்கின்றீர்களா? என்று உங்களை நீங்களே ஆராய்ந்து சரிசெய்து கொள்ளுங்கள். தாவீதை போல எல்லாவற்றையும் தேவனிடம் தெரியப்படுத்துங்கள். அவ்வாறு தெரியப்படுத்தும் பொழுது ஒரு சமாதானம் உங்களுக்கு உண்டாகும். அது எத்தனை முறை என்றாலும் பரவாயில்லை. கர்த்தர் உங்களை சரியான பாதையில், செவ்வையான பாதையில் வழி நடத்தி உயர்த்துவார்.

## வார்த்தையின் மூலம் உண்டாகும் இரைச்சல்

எசேக்கியேல் 37:1-10 இந்த வசனங்களில், எசேக்கியேல் தீர்க்கதரிசிக்கு கர்த்தர் ஒரு தரிசனத்தை காண்பித்தார். அதில் உலர்ந்த எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கிற்கு எசேக்கியேலைக் கொண்டுபோய், அங்கே நிறுத்தி, மனுஷகுமாரனே இந்த எலும்புகளை பார்த்து தீர்க்கதரிசனம் உரை" என்கிறார். அதற்கு கீழ்ப்படிந்து எசேக்கியேல் தீர்க்கதரிசனம் உரைக்கும்பொழுது எலும்புகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்தது. எலும்புகள் சேர்ந்த பிறகு அதற்கு மேலே நரம்பு, மாம்சம், தோல்கள் மூடும் என்று சொல்கிறார். அதேபோல எசேக்கியேல் தீர்க்கதரிசனம் உரைத்தான். **"எனக்குக் கட்டளையிட்டபடியே நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன், நான் தீர்க்கதரிசனம் உரைக்கையில் ஒரு இரைச்சல் உண்டாயிற்று இதோ, அசைவுண்டாகி, ஒவ்வொரு எலும்பும் தன்தன் எலும்போடே சேர்ந்துகொண்டது" (எசேக். 37:7)** இந்த இரைச்சல் எப்படி இருந்தது. எலும்பும் எலும்பும் சேரும்பொழுது ஒரு அசைவு ஏற்படுகிறது. அசைவு என்று சொல்லும்பொழுது Physical Experiment-க்கு எல்லாம் Tuning Fork ஒன்றை உபயோகிப்பார்கள், அதை லேசாக தட்டும்பொழுது ஒருவித vibration உண்டாகும். அதுபோல இந்த எலும்புகள் ஒன்றோடொன்று சேர்ந்தப்பொழுது அங்கே ஒரு இரைச்சல் உண்டானது. எசேக்கியேல் தீர்க்கதரிசனம் உரைத்தப்பொழுது அங்கு இரைச்சல் உண்டானது. தீர்க்கதரிசனம் என்பது **"தேவனுடைய வாயிலிருந்து**

**புறப்பட்ட வார்த்தையை கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசியின் மூலமாய் சொல்ல வைக்கிறார். இந்த தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்ட தினாலேயே எலும்புகள் அசைக்கப்படுகின்றது"** இரைச்சல் உண்டாகும்பொழுது இந்த காய்ந்துபோன எலும்புகள் ஒன்றோடு ஒன்று சேர்ந்துக்கொள்கிறது. அந்த எலும்புகளை நரம்பு, மாம்சம், தோல் மூடுகிறது. அதற்குபிறகு ஆவியை நோக்கி தீர்க்கதரிசனம் சொல்லும்பொழுது ஆவி அந்த எலும்பிற்குள் புகுந்து அங்கே எலும்புகள் உயிரடைந்து மகா பெரிய சேனையாக எழும்புகிறது. இவ்வாறு ஜீவனை உண்டாக்கும் இரைச்சல் கர்த்தருடைய வார்த்தையில் மாத்திரம்தான் உள்ளது.

பிரியமானவர்களே! இன்றைக்கு என் ஆவிக்குரிய வாழ்க்கை வறண்டு போய் காணப்படுகிறதே. வேதத்தை என்னால் சரியாக புரிந்துக்கொள்ள முடியவில்லையே. பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையை இழந்து இன்று வறட்சியான நிலையில் இருக்கிறேன். என்னுடைய ஆவிக்குரிய ஜீவியம் பூஜ்யமாக இருக்கிறது என வருந்திக் கொண்டிருக்கிறீர்களா? அப்படிப்பட்ட ஒரு நிலையில் கர்த்தருடைய வார்த்தை மாத்திரம் தான் ஒரு அசைவை, இரைச்சலை உங்களில் ஏற்படுத்த முடியும். அதனால் தான் **"வேதத்தை வாசியுங்கள், ஆலயத்திற்கு செல்லுங்கள், தேவனுடைய செய்திகளை கேளுங்கள்"** என்று மீண்டும் மீண்டும் சொல்கின்றோம். வேத வசனங்கள் ஒரு மனிதனுக்குள் போகும்பொழுது தான் அந்த மனுஷனுடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தில் ஒரு அசைவு உண்டாகிறது. அந்த வார்த்தையை கேட்காமல் ஒரு மந்திரவாதியிடம் போகின்ற மாதிரி இயேசுவிடம் வந்தால் ஆசீர்வாதம் கிடைக்காது. நான் இயேசுவை விசுவாசித்து வந்தேன், நான் சுகம் பெற்றேன் என்று அத்துடன் இருந்துவிடவும்கூடாது. அதற்கு மேலே ஆவிக்குரிய ஜீவியத்தில் நீங்கள் வளர வேண்டும் என்றால் கர்த்தருடைய வார்த்தையினால் உண்டாகும் அசைவு உங்களுக்குள் வேண்டும். இயேசுவிற்காக வைராக்கியமாக எழும்ப வேண்டும் என்றால், கர்த்தருடைய வார்த்தையினால் நிரம்பி இருக்க வேண்டும். ஒருமுறை அல்ல, பத்து முறை வேதத்தை படித்து விட்டேன் அது போதும் என நினைக்காதீர்கள். கர்த்தருடைய வார்த்தையை விசுவாசித்து, அதை நீங்கள் ஏற்றுக்கொண்டு அந்த வார்த்தையின்படி நீங்கள் நடக்க முயற்சிக்கும்பொழுதுதான் அந்த வார்த்தை உங்களுக்குள் கிரியை செய்யும். தேவனுடைய வார்த்தை ஜீவனுள்ளது. **யோவான் 1:1-5ல் "ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவருக்குள் ஜீவன் இருந்தது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.** இயேசுவின் வல்லமை அவருடைய வார்த்தையில் அடங்கியிருக்கிறது. தீர்க்கதரிசனம் என்ற பெயரில் ஒரு மனுஷனுடைய வார்த்தையை மாத்திரம் நம்பி வாழ்ந்துவிடலாம் என நினைக்க வேண்டாம். தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையையும் நம்ப வேண்டும். அவருடைய வார்த்தையை நாம் நம்பும்பொழுது நாம் பிழைத்திருப்போம்.

அன்பானவர்களே! இக்காலத்தில் மக்கள் தேவனுடைய வார்த்தைக்கு முக்கியத்துவமே கொடுப்பதில்லை. பாடல் பாடுகின்றேன், ஜெபம் செய்கின்றேன், பிரசங்கத்தை கேட்கின்றேன் என்று சொல்கிறார்கள். ஆனால் இன்று எத்தனை பேர் வேதத்தை வாசிக்கின்றீர்கள், தியானிக்கின்றீர்கள். ஒவ்வொரு நாளும் கர்த்தாவே இந்த வார்த்தையின்படி என்னை

ஆசீர்வதியும் என்று சொல்லி வேத வசனத்திற்கு முக்கியத்துவம் கொடுங்கள். இன்று அநேகருடைய வீட்டில் வேதம் தூசி படிந்துள்ளது. ஒரு சிலர் வேதப் புத்தகமே இல்லாமல் இருக்கின்றீர்கள். யோசித்து பாருங்கள். காரணங்களை சொல்லிக்கொண்டே போகாதீர்கள்! இந்த நிலை முற்றிலும் மாற வேண்டும். மாறும் பொழுது நிச்சயம் தேவனால் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

ஒரு சமயம் ஒரு தேவ மனிதர் அமெரிக்க தேசத்திலிருந்து சீனாவிற்கு ஊழியம் செய்யும்படியாக சென்றிருந்தார்கள். சீனாவில் நம்மைப்போல சுதந்திரமாக தேவனை ஆராதிக்க முடியாது. இரகசியமாக பல இடங்களில் (underground churches) ஒரு சிலர் கூடி தேவனை ஆராதித்து ஜெபிப்பார்கள். அவ்வாறு 30 பேர் கொண்ட ஒரு சிறிய கூடுகையில் இந்த தேவ மனிதர் தேவ செய்தி அளிப்பதற்காக வந்திருந்தார். அப்பொழுது அங்கிருந்த 30 பேரில் நான்கு, ஐந்து பேர் மட்டுமே வேதப்புத்தகத்தை கையில் வைத்திருந்தார்கள். தேவ ஊழியர் ஆமோஸ் தீர்க்கதரிசன புத்தகத்தை படிக்க சொன்னார். அப்பொழுது ஒருவர் வேதத்தை திறந்து படிப்பதற்குள் இன்னொரு சகோதரி மனப்பாடமாக அந்த வசனத்தை சொன்னார்கள். இந்த சகோதரி மாத்திரமல்ல, அங்கிருந்த அனைவரும் கையில் வேதாகமம் இல்லாமல் மனப்பாடமாக எந்த வசனத்தை கேட்டாலும் சரியாக சொன்னார்கள். இவருக்கு ஒரே ஆச்சரியம். வேதமே இல்லாமல் எப்படி நீங்கள் வசனங்களை சரியாக சொல்கிறீர்கள் என கேட்டபொழுது, அவர்கள் "நாங்கள் சுவிசேஷத்தினிமித்தம் அநேக நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றோம். அந்த சமயங்களில் எங்களது உறவினர்கள் மாதத்தில் ஒரு நாள் மட்டும் எங்களை சந்திப்பதற்கு அனுமதி வழங்கப்படும். அவர்கள் வரும்பொழுது எங்களுக்கு கொண்டு வருகிற ஆடையில் வேதத்தின் பக்கங்களை தைத்து எங்களிடம் கொடுப்பார்கள். அதை நாங்கள் எடுத்து ஒழுங்குபடுத்தி யாருக்கும் தெரியாமல் சிறையில் வைத்து, அந்த வசனங்களை படித்து அப்படியே மனப்பாடம் செய்வோம். அதனால்தான் நீங்கள் வாசிக்கச் சொன்னவுடன் எங்களால் வேதத்தை பார்க்காமலேயே மனப்பாடமாக சொல்ல முடிந்தது என்றார்கள். அதைக்கேட்டு இந்த தேவ ஊழியருக்கு கண்ணீர் வந்துவிட்டது. பிரசங்கம் முடிந்தது. ஜெபம் செய்தார்கள். கடைசியாக, 'நான் திரும்பவும் அமெரிக்க தேசத்திற்கு செல்வதற்கு முன் உங்களுக்கு எந்த காரியத்திற்காக நான் ஜெபிக்க வேண்டும்? சொல்லுங்கள் எனக்கேட்டார். அதற்கு அவர்கள் " உங்கள் தேசத்தில் நீங்கள் எல்லாம் சுதந்திரமாக ஆலயத்திற்கு எப்படி போகிறீர்களோ, எப்படி தேவனை மனதார ஆராதிக்கிறீர்களோ, அதுபோல நாங்களும் தேவனை ஆராதிக்க வேண்டும் என ஆசைப்படுகிறோம்" அதற்காக ஜெபம் செய்யுங்கள் என ஏக்கத்தோடு சொன்னார்கள். அப்பொழுது அந்த தேவ ஊழியர் "நான் அதற்காக ஜெபம் செய்ய மாட்டேன். **"நாங்கள் உங்களைப் போல துன்பப்பட வேண்டும் என்றுதான் ஜெபம் செய்யப்போகிறேன். அப்பொழுது தான் இயேசு கிறிஸ்துவோடு நாங்கள் இன்னும் ஐக்கியப்பட முடியும்"** என்று கூறினார். இது ஒருவேளை வித்தியாசமான ஜெபமாக இருக்கலாம். ஆனால் இதனுடைய உட்கருத்து உண்மை. துன்பத்தின் மத்தியில் தான் வேதவசனங்களின் மகிமையை நம்மால் உணர்ந்துக்கொள்ள முடியும். இது என்ன வேதம் தானே, இதை படிக்க வேண்டிய தேவை என்ன இருக்கிறது என சாதாரணமாக நினைத்து விடுவோம். **சங்கீதம் 119:154-ல்**

**"உம்முடைய வார்த்தையின்படி நீர் என்னை உயிர்ப்பியும்"** என எழுதப்பட்டுள்ளது.

ஆம் அன்பானவர்களே! உலர்ந்த எலும்பை போலகாய்ந்தஉங்கள்வாழ்க்கைஉயிர்ப்பிக்கப்பட வேண்டும் என்றால் இந்த வேதவசனத்திற்கு மாத்திரமே வல்லமை உண்டு. இந்த வசனம் உங்களுக்குள் போகும்பொழுது தான் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை கிரியை செய்யும். உங்கள் வாழ்க்கையில் ஒரு அசைவு ஏற்பட வேண்டும் என்றால் கர்த்தருடைய வார்த்தை என்னும் ஜீவன் உங்களுக்குள் கடந்து செல்ல வேண்டும்.

எலியா பெரிய தீர்க்கதரிசியாக இருந்தாலும் கர்த்தரிடம் கெஞ்சி ஜெபம் செய்தான். ஆசீர்வாதத்தின் இரைச்சல் உண்டானது. தாவீது ஒரு ராஜாவாக இருந்தப்பொழுதும் கர்த்தரிடம் எப்பொழுதும் ஆலோசனை கேட்டு செயல்பட்டான். ஜெயத்தின் இரைச்சல் உண்டானது. எசேக்கியேல் தீர்க்கதரிசி உலர்ந்த எலும்புகளுக்கு தீர்க்கதரிசனம் சொன்னபொழுது ஜீவனைப் பெற்றுக்கொண்ட இரைச்சல் அதாவது வார்த்தையின் மூலம் பரிசுத்த ஆவியானவரின் இரைச்சல் உண்டானது.

நீங்களும் எலியாவைப் போல ஊக்கமாய் ஜெபியுங்கள். உங்கள் வாழ்வில் ஆசீர்வாதத்தின் இரைச்சல் உண்டாகும். தாவீதைப் போல கர்த்தரிடம் ஆலோசனை கேட்டு செயல்படுங்கள். உங்கள் காரியங்கள் அனைத்திலும் ஜெயத்தின் இரைச்சல் உண்டாகும். ஜீவனுள்ள வசனங்களை இடைவிடாது வாசியுங்கள். தியானியுங்கள். உங்கள் வாழ்வில் உலர்ந்த நிலையில் இருக்கிற காரியங்கள் உயிர் பெறும். ஆவிக்குரிய ஜவியத்தில் பரிசுத்த ஆவியானவரின் இரைச்சல் உண்டாகி கர்த்தருக்காக எழும்பி பிரகாசிப்பீர்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!



# பரலோகமே என் சொந்தமே என்ற புத்தகத்தைப்பற்றி ஒரு சில வரிகள் உங்களுடன்.....

என் அன்பு தேவ பிள்ளைகளே! மாசற்ற ஆட்டுக்குட்டியானவராகிய இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்ட விசுவாசப் பெருமக்களே உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

நம் தேவனாகிய கர்த்தர் தமது அன்பு குமாரனாகிய இயேசுகிறிஸ்து மூலமாய் எனக்குக் காண்பித்த பரலோக இரகசியங்களைக் குறித்து இந்தப் புத்தகத்தில் எழுதி இருக்கிறேன். கர்த்தர் நமக்காக ஆயத்தம் செய்து வைத்திருக்கிற, சொல்லி முடியாத, மகிமை நிறைந்த பரலோகம் பற்றிய பல உண்மைகளை இந்த புத்தகத்தில் உங்களுக்கு கூறி இருக்கிறேன்.

கர்த்தரை நேசிக்கிற பிள்ளைகளுக்காகவும், விசுவாசிகளின் விசுவாசம் பெருகவும், தேவனை அறியாதவர்கள் அவரை சரியாக அறிந்துகொள்ளவும் இந்த புத்தகத்தை இந்த கடைசி காலங்களில் (Before Rapture) எழுதும்படி ஆவியானவரால் கட்டளைப் பெற்றேன்.

தேவன் வாசம் பண்ணும் பரலோகத்தில் பசி, தாகம், வெயில், உஷ்ணம், கண்ணீர், மரணம், துக்கம், வருத்தம் போன்ற நம்மை பாதிக்கக்கூடிய எந்த காரியமும் இருக்காது. **(வெளி. 21:47:16,17)** அவர் வாசம் செய்யும் உன்னத பரலோகத்தில் நாம் அனைவரும் இயேசுவை போலவும் **(1 யோவான் 3:2)** தேவ தூதர்களை போலவும் இருப்போம். **(மத்தேயு 22:30)** நித்திய நித்தியமாக எண்ணி முடியாத, கோடிக்கணக்கான வருடங்கள் அவருடன் சந்தோஷமாய் வாழ்வோம்.

நாம் வாழுகிற இந்த உலகம் அழிவுக்கு நேராக ஓடிக்கொண்டிருக்கிறது. தேவ கோபாக்கினைக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது என்பதை நன்கு உணர முடிகிறது. ஆனால் தமது சிருஷ்டிகள் எல்லாவற்றிற்கும் தயையும், கிருபையும் காண்பிக்கும் தேவன் **(சங்.145:8,9)** பொல்லாத சத்துருவாகிய சாத்தானை நித்தியமாய் அழியாத அக்கினியில் தள்ளினது போல மனிதனை தள்ள நினைக்கவில்லை. நித்திய அழிவிலிருந்து தப்புவதற்கு ஒரு நல்ல வழியை காண்பித்தார். சத்துரு கொண்டு வந்த மரணத்தை நித்திரை என்று அழைத்தார். **(யோவான் 11:11)** ஏனென்றால், மரணத்திற்கு பின் நித்திய அழிவை நோக்கி ஓடுகிற மனிதனுடைய ஆத்துமாவையும், சரீரத்தையும் மீட்பதற்காக தமது சொந்த குமாரனை உலகத்திற்கு அனுப்பினார்.

தேவன் வாசம் செய்யும் இந்த பரலோகத்தை பற்றி அநேகருக்கு தெரியாது. அநேகர் கிண்டல், கேலி செய்வார்கள். ஆம்! இயேசு சொன்னது போல மனிதரில் எவரும் பரலோகம் வந்ததும் இல்லை பரலோகத்திற்கு ஏறிப்போனவர்களும் இல்லை. இயேசுகிறிஸ்து ஒருவர் மாத்திரமே பரலோகத்திலிருந்து இறங்கி வந்தவரும், பரலோகத்திற்கு ஏறிப்போனவருமாய் இருக்கிறார். **(யோவான் 3:13, 6:62, அப்.1:9, மாற்கு 16:19)**

ஒரு மனிதனும் காணக்கூடாத, சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிற மகா பரிசுத்தரும், வல்லமையுள்ள, கோடாகோடி தேவ தூதர்கள் ஸ்தோத்தரித்து ஆர்ப்பரிக்கிற, அவர் வாசம் பண்ணுகிற பரலோகத்தை இந்த மாம்ச சரீரத்தில் எவரும் கண்டதில்லை, காணவும் முடியாது. ஆனால் அவருக்குள் நித்திரை அடைந்தவர்களின் ஆத்துமாக்கள் அங்கே சென்று ஆனந்த மகிழ்ச்சியடைகிறார்கள். **(லூக்கா 16:23)**

நான் இயேசு கிறிஸ்துவை அறிந்த நாளிலிருந்து அவரை தற்சொரூபமாக, நேரடியாக பார்க்க வேண்டும் என்ற வாஞ்சை அதிகமாகி, அவரை நேரில் காணவேண்டும் என்று மிகவும் அழுதேன். அதன்படி கர்த்தர் தமது மிகுந்த கிருபையால் எனது 29-ம் வயதில் இயேசு எனக்கு காட்சியளித்தார்.

என்னுடன் 18 மணி நேரம் நேரடியாக பேசினார்.

என்னுடைய இரண்டாம் மரணத்தில் இயேசு தாம் வாசம் செய்யும் பரலோகத்திற்கு என் ஆத்துமாவை தமது செட்டைகளின் மறைவில் வைத்து அழைத்து சென்றார். **(மாம்சமும், சீரமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை. 1 கொரி.15:50)** தாம் உண்டாக்கிய மகிமையான நட்சத்திர மண்டலங்களை எல்லாம் காண்பித்தார். பரலோகத்திற்கு என்னை கொண்டுபோய், பரலோக மகிமைகளை எல்லாம் காண்பித்து, என் ஆத்துமாவை உலகம் தரக்கூடாத சந்தோஷத்தினால் நிரப்பினார். நான் பல வருடங்களாக பட்ட வேதனைகள், சஞ்சலங்கள், கண்ணீரின் பாதைகள், நோயின் அகோரங்கள் அனைத்தும் அதற்குள் நுழைந்தவுடன் ஒரு நொடியில் மறைந்து போய்விட்டது.

உலகம் முழுவதும் உண்மை தேவனாகிய எனக்கு விரோதமாய் எழும்பும் காலம் வரும். அப்பொழுது என்னை நேசிக்கிற மக்கள் என்னைவிட்டு விலகாதபடி இந்த புத்தகம் விசுவாசத்தை தந்து, ஊழியத்தில் உற்சாகமாய் செயல்பட உதவியாக இருக்கும் என கூறினார். ஆகவே இந்த புத்தகத்தை விரைவில் வெளியிடயிருக்கிறோம். இதற்காக ஜெபியுங்கள். தமிழிலில் அச்சடிப்பதற்கு 5 முதல் 7 லட்சம் ரூபாய் தேவைப்படுகின்றது. ஆங்கிலம் மற்றும் தெலுங்கில் அச்சடிப்பதற்கு 15 லட்சம் தேவை. உங்களில் சிலர் இப்பொழுதே உங்களால் இயன்ற அளவு கொடுத்திருக்கிறீர்கள். வசதி உள்ளவர்கள் அனைவரும் இந்த புத்தகம் வெளியிட உற்சாகமாய் கொடுத்து தாங்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். இப்புத்தகம் கிறிஸ்தவர்களுக்கும், கிறிஸ்துவை அறியாத மக்களுக்கும் மனத்தெளிவை உண்டாக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஜெபியுங்கள்! உதவுங்கள்! **(1 கொரி. 2:9,10)**

## வங்கிக் கணக்குகளின் விபரம்



**MINISTRY OF JESUS**
**A/C NO. 10848474869**

**ANBARIN OOZHIYAM**
**A/C NO. 10848559426**

**DR. ANANDA STIRA**
**A/C NO. 10848469699**

**IFS Code: SBIN 0000930**
**State Bank of India, Cantonment, Trichy Main Branch.**

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள்.
**(10.00 AM - 6.00 PM)**



# HIRING DOCTORS

PLACE – S.J.S.T. RURAL HOSPITAL

EXPERIENCE – 2 YEARS

SALARY – WILL BE PAID ACCORDING TO QUALIFICATIONS.

DUTY – 12 HOURS

Apply to: ministryofjesushr@gmail.com

# we are HIRING Join OUR TEAM

- CORRESPONDENCE
  (Any UG/PG Candidates)
  Skills Required: Typing & Computing Skills
  (Tamil,English)
- DRIVER

SEND YOUR RESUME TO
ministryofjesushr@gmail.com

## அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விபரங்கள்

**facebook**

Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

**Youtube**

Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

**Twitter**

Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

**Instagram**

ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org

www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in


சேலத்தில்
அற்புதத்தின் மாலை கூட்டம்
ஆகஸ்ட்
09
(சனிக்கிழமை)
நேரம்
மாலை 5.00 மணி முதல்
இரவு 9:00 மணி வரை
தேவ செய்தி : Dr.ஆனந்த ஸ்திரா
ஆசன் அம்மாள் ஹால்,CSI லெச்லெர் சர்ச் வளாகம்,
அரசு மருத்துவமனை எதிரில், கோட்டை, சேலம்–1
தொடர்புக்கு : 94888 45627
(கூட்ட முடிவில் தனிஜெபம் ஏறெடுக்கப்படும்)


திருநெல்வேலியில்
அற்புத குடும்ப ஆசீர்வாத கூட்டம்
மற்றும் விடுதலையின் ஜெபம்
ஆகஸ்ட்
16
சனிக்கிழமை [அரசு விடுமுறை]
காலை 9.30 மணி முதல்
மதியம் 2:00 மணி வரை
Dr. ஆனந்த ஸ்திரா & Mrs. மார்கிரேட் ஸ்திரா
PPL கல்யாண மண்டபம், 5, பிரசன்ன விநாயகர் கோவில் தெரு,
VOC மைதானம் அருகில்,பாளையங்கோட்டை
தொடர்புக்கு : 94888 45627

## ஈரோட்டில்

# அற்புத குடும்ப ஆசீர்வாத கூட்டம் மற்றும் விடுதலையின் ஜெபம்



ஆகஸ்ட்

**27**

புதன்கிழமை
அரசு விடுமுறை

**நேரம்**
**காலை 9.30 மணி முதல்**
**மதியம் 2:00 மணி வரை**

**தேவ செய்தி : Dr.ஆனந்த ஸ்திரா**
**Mrs.மார்கிரேட் ஸ்திரா**

C.S.I. பாரிஸ் ஹால்,
டெலிபோன் பவன் அருகில், பிரப் ரோடு, ஈரோடு

**தொடர்புக்கு : 94888 45627**

**(கூட்ட முடிவில் தனிஜெபம் ஏறெடுக்கப்படும்)**

## திருச்சியில்

# அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்



**நேரம்**
**காலை 9:30 மணி முதல்**
**மதியம் 2:00 மணி வரை**

**ஆகஸ்ட் 30 சனிக்கிழமை**

**தேவ செய்தியாளர்கள்**
**Dr.ஆனந்த ஸ்திரா மற்றும் குடும்பத்தினர்**

**இடம்**
**அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம், 10–வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு,**
**தில்லைநகர், திருச்சி–18**

தொடர்புக்கு : செல் 9488845627, 0431-2741922
(கூட்ட முடிவில் தனிஜெபம் ஏறெடுக்கப்படும்)



# துதி அறிக்கை

## வலி நீங்கியது!



எனக்கு 54 வயதாகிறது. சமீபத்தில் கடுமையான வயிற்று வலியால் கஷ்டப்பட்டேன். உடனே அன்பரின் ஊழியத்திற்கு வாட்ஸ் அப் வாயிலாக செய்தி அனுப்பி ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். உடனே பாரத்துடன் ஜெபித்தார்கள். அந்த நிமிடமே என்னுடைய வலி நீங்கியது. சுகம் கொடுத்த கர்த்தரை துதிக்கிறேன்.

Bro. மார்ட்டின் டேனியல், முசிறி.

Malayalam Whats App No
+91 94889 32937

## வேலை கிடைத்தது!



என் மகன் பி.ஏ முடித்து சரியான வேலையில்லாமல் கம்பி கட்டும் வேலைக்கு சென்றுக் கொண்டிருந்தான். திருச்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்து Dr.ஆனந்தஸ்திரா அவர்களிடம் மகனுக்கு நல்ல வேலை கிடைக்க ஜெபிக்கும்படி சொன்னேன். ஐயா பாரத்துடன் ஜெபித்தார்கள். நானும் பொருத்தனையோடு ஜெபித்து சென்றேன். தற்பொழுது மகனுக்கு சென்னையில் 25,000 ரூபாய் சம்பளத்தில் நல்ல வேலை கிடைத்துள்ளது. என்னுடைய பொருத்தனை காணிக்கையை அன்பரின் ஊழியத்திற்கு தருகிறேன்.

Bro. இஸ்ரவேல், கடலூர்.

# கண்களில் உள்ள கட்டி நீங்கியது!



நான் திருச்சி அன்பரின் ஊழிய கூட்டத்திற்கு தொடர்ந்து வந்துக்கொண்டிருக் கிறேன். என் இரண்டு கண்களில் திடீரென கட்டி வந்தது. அதனால் இரண்டு மாதமாக கஷ்டப்பட்டேன். அன்பரின் ஊழியத்தின் ஜெப எண்ணெயை கண்களில் தடவினேன். அந்த கட்டிகள் முற்றிலும் மறைந்து விட்டது.

நீண்ட நாட்களாக எனக்கு ஸ்காலர்சிப் கிடைக்கவில்லை. கூட்டத்திற்கு வந்திருந்தப்பொழுது Dr. ஆனந்த ஸ்திரா அங்கிள் எனக்காக ஜெபித்தார்கள். அதன்பின் எனக்கு ஸ்காலர்சிப் கிடைத்தது. இந்த இரண்டு அற்புதங்களை செய்த கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

Bro. பால் ரெய்னர், திருச்சி.

# ஆப்ரேஷன் இல்லாமல் சுகம் கிடைத்தது!



கால்வலியினால் அதிகம் கஷ்டப்பட்டேன். மருத்துவமனைக்கு சென்றபொழுது, என்னுடைய கால் முட்டியில் ஜவ்வு நகர்ந்துவிட்டது. உடனே ஆப்ரேஷன் செய்ய வேண்டும் என சொன்னார்கள். மதுரையில் நடைபெற்ற கூட்டத்தில் நான் கலந்துக் கொண்டேன். தனிஜெபத்தில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் எனக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். தற்பொழுது ஆப்ரேஷன் இல்லாமல் நல்ல சுகத்துடன் இருக்கிறேன். பரிபூரண சுகத்தை தந்த கர்த்தரை துதிக்கிறேன்.

Sis. வான்மதி, மதுரை.

# சுயநினைவு திரும்பியது!



என்னுடைய தோழியின் அம்மாவிற்கு வயது 70. ஒரு நாள் நள்ளிரவு திடீரென பெலவீனப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள். சிகிச்சை அளித்தும் கோமா நிலையில் இருந்தார்கள். அந்த நேரத்தில் என் தோழி கண்ணீரோடு என்னை தொடர்புக்கொண்டு, அம்மாவைத் தவிர எனக்கு யாரும் இல்லை என சொன்னார்கள். உடனே நான் Dr. ஆனந்த ஸ்திரா அவர்களுக்கு வாட்ச் அப் வாயிலாக இந்த செய்தியை தெரிவித்தேன். மரித்து மூன்றாம் நாள் உயிரோடெழுந்த இயேசுகிறிஸ்து தோழியின் அம்மாவையும்

எழுப்புவார் என செய்தி அனுப்பினார்கள். சிறிது நேரத்தில் அம்மா கண் விழித்து எழுந்து உட்கார்ந்தார்கள். அற்புத சுகத்தை தந்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். ஐயாவிற்கு எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம்.

Sis. மணிமேகலை, பட்டுக்கோட்டை.

## மூன்று அற்புதங்கள் நடக்கும்!



நான் கடந்த 35 வருடங்களாக அன்பரின் ஊழிய பங்காளராக இருந்து வருகிறேன். கடந்த ஜனவரி மாதம் திருச்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு நான் வந்திருந்தேன். தனிஜெபத்தில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் எனக்காக ஜெபித்துவிட்டு. 'கர்த்தர் உனக்கு மூன்று அற்புதங்களை செய்வார்' என சொல்லி அனுப்பினார்கள்.

என் மகளுக்கு குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்தது. ஜெபத்திற்கு பின் என் மகள் கருவுற்று தற்பொழுது 7 மாத கர்ப்பிணியாக இருக்கிறாள். அரசாங்கத்தின் மூலம் எனக்கும், என் மகளுக்கும் சொந்த வீடு கிடைத்தது. என் கடைசி மகள் பி.காம். தேர்வில் 85 சதவீதம் மதிப்பெண்களுடன் வெற்றி பெற கர்த்தர் தயை செய்தார். அவசரமாக அடைக்க வேண்டிய கடனை முடிக்க கர்த்தர் உதவி செய்தார். தேவனுக்கே மகிமை!

Sis. பத்மா, திருச்சி

## குழந்தை பிறந்தது!



எனக்கு 2021-ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. இரண்டு முறை கருவுற்று அபார்ஷன் ஆகிவிட்டது. அதன்பிறகு கருவுறவில்லை. அதற்காக பல மருத்துவ மனைகளுக்கு சென்று சிகிச்சை எடுத்தேன். எந்த பலனும் இல்லை. அதன்பின் திருச்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்தப்பொழுது, Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் ஜெப நேரத்தில் என்னை பெயர் சொல்லி அழைத்து, இனி மாத்திரை எதுவும் எடுக்க வேண்டாம். கர்த்தர் உனக்கு குழந்தை தருவார். நீ வந்து சாட்சி சொல்லுவாய் என தீர்க்கதரிசனமாக சொன்னார்கள்.

அதன்பின் மாத்திரைகளை நிறுத்திவிட்டு. நானும் விசுவாசத்துடன் ஜெபித்து வந்தேன். தேவ கிருபையால் கருவுற்றேன். கருவுற்றப்பிறகும் ஸ்கேன் பரிசோதனையில் கருவில் உள்ள குழந்தைக்கு பல பிரச்சனைகள் இருக்கிறது என சொன்னார்கள். ஆனால் கர்த்தர் எனக்கு இரங்கி எந்த பிரச்சனையும் இல்லாமல் சுகபிரசவத்தில் ஆண் குழந்தையை பெற்றெடுக்க ஒத்தாசை செய்தார். என் கண்ணீரை கண்ட கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன்.

Sis. ஷாமினி, திருச்சி.

dranandastira@mojindia.org

# பதவி உயர்வு கிடைத்தது! திருமணம் நடைபெற்றது!



எங்கள் மாமியார் அன்பரின் ஊழிய நீண்ட நாள் பங்காளர். அவர்கள் மூலம் அன்பரின் ஊழியத்தை அறிந்து நாங்களும் பங்காளராக இருக்கிறோம். வள்ளியூரில் நடைபெற்ற கூட்டத்திற்கு நாங்கள் குடும்பமாக வந்து கலந்துக்கொண்டோம். என் மூத்த மருமகள் தமிழ்நாடு கிராம வங்கியில் வேலை பார்த்து வருகிறார்கள். தனிஜெபத்தில் ஐயாவை சந்தித்து குடும்பமாக ஜெபித்து வந்தோம். அதன்பின் என் மருமகளுக்கு வங்கியில் உதவி மேலாளராக பதவி உயர்வு கிடைத்தது.

என் இளைய மகன் அன்பரின் ஊழியத்தில் பணி செய்து வருகிறான். அவனுடைய திருமணத்திற்காக ஐயா குடும்பத்தினரும், நாங்களும் பாரத்துடன் ஜெபித்து வந்தோம். கடந்த மே மாதம் மகனுக்கு ஏற்ற துணை கிடைத்து திருமணம் மிகுந்த ஆசீர்வாதமாக நடைபெற்றது. எங்கள் குடும்பத்திற்கு கர்த்தர் செய்த அனைத்து நன்மைகளுக்காகவும் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறோம்.

Bro. ஸ்டீபன், வள்ளியூர்.

# மருந்தினால் குணமாகவில்லை! ஜெபத்தினால் குணமானது!



எங்கள் மகனுக்கு இரண்டரை வயதில் கடுமையான காய்ச்சல் வந்தது. அந்த காய்ச்சல் தொடர்ந்து பல நாட்கள் இருந்துக்கொண்டே இருந்தது. மருத்துவமனைக்கு சென்றபொழுது பல பரிசோதனைகளை எடுத்தார்கள். மருத்துவர்களால் கண்டு பிடிக்கவே முடியவில்லை. காய்ச்சலும் நீங்கவில்லை. அந்த நேரத்தில் நாசரேத்தில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்களின் கூட்டம் நடைபெற்றுக்கொண்டு இருந்தது. நாங்கள் கூட்டத்திற்கு சென்று ஐயாவிடம் மகனுக்காக ஜெபிக்கும்படி சொன்னோம். ஐயா பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். அந்த நாளிலில் காய்ச்சல் நீங்கியது. மகனுக்கு பரிபூரண சுகத்தைக் கொடுத்து, இந்த நாள் வரை பாதுகாத்து வருகிற கர்த்தரை துதிக்கிறேன்.

Sis. தமிழ்செல்வி, நாசரேத்.

*English Whats App No*
+91 94889 32937

*Tamil Whats App No*
+91 95004 87059

ஆகஸ்ட் மாதத்திற்குரிய தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

# AUGUST 2025

**01** நான் ஏற்ற காலத்தில் உங்களுக்கு மழை பெய்யப்பண்ணுவேன். (லேவி. 26:4)

**02** ஏற்றகாலத்தில் உன் தேசத்திலே மழை பெய்யவும், நீ கையிட்டுச்செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்கவும், கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷசாலையாகிய வானத்தைத் திறப்பார். (உபாகமம் 28:12)

**03** பூமி தன் பலனையும், வெளியிலுள்ள மரங்கள் தாங்கள் கனியையும் கொடுக்கும். (லேவி. 26:4)

**04** தேவனே, சம்பூரண மழையைப் பெய்யப்பண்ணினீர், இளைத்துப்போன உமது சுதந்தரத்தைத் திடப்படுத்தினீர். (சங்கீதம் 68:9)

**05** இதோ, நான் உங்கள் பட்சத்திலிருந்து, உங்களைக் கண்ணோக்குவேன். (எசேக்கியேல் 36:9)

**06** அவர் நியாயத்திற்கு ஜெயங் கிடைக்கப்பண்ணுகிற வரைக்கும், நெரிந்த நாணலை முறிக்காமலும், மங்கியெரிகிற திரியை அணைக்காமலும் இருப்பார். (மத்.12:20)

**07** நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக் கிறோமே. (ரோமர் 8:37)

**08** என் ஆவியானவரும் உங்கள் நடுவில் நிலைகொண்டிருப்பார். பயப்படாதேயுங்கள். (ஆகாய்2:5)

**09** விருட்சத்தின் கனிகளையும் வயலின் பலன்களையும் பெருகப்பண்ணுவேன். (எசேக்கியேல் 36:30)

**10** எங்கள் களஞ்சியங்கள் சகலவித வஸ்துக்களையும் கொடுக்கத்தக்கதாய் நிரம்பியிருக்கும். (சங்கீதம் 144:13)

**11** உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன். என்றார். (யோவான் 16:33)

**12** ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான். (வெளி.21:7)

**13** என் சத்துரு என்மேல் ஜெயங்கொள்ளாததினால், நீர் என்மேல் பிரியமாயிருக்கிறீரென்று அறிவேன். (சங்.41:11)

**14** உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர். (1 யோவான் 4:4)

**15** உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும். (நீதிமொழிகள் 3:10)

**16** நான் அவர்களையும் என் மேட்டின் சுற்றுப்புறங்களையும் ஆசீர்வாதமாக்கி, ஏற்றகாலத்திலே மழையைப் பெய்யப்பண்ணுவேன். (எசேக்கியேல் 34:26)

**17** அவர் மழையைப்போலவும், பூமியின்மேல் பெய்யும் முன்மாரி பின்மாரியைப் போலவும் நம்மிடத்தில் வருவார். (ஓசியா 6:3)

**18** உன் கூடையும், மாப்பிசைகிற உன் தொட்டியும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். (உபா.28:5)

**19** என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள். (எரேமியா 31:14)

**20** ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்குத் தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன். (வெளி.2:7)

**21** தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது. (தானியேல் 6:28)

**22** நாம் கிரகிக்கக்கூடாத பெரிய காரியங்களை அவர் செய்கிறார். (யோபு 37:5)

**23** தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும். (1 யோவான் 5:5)

**24** குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும், ஜெயமோ கர்த்தரால் வரும். (நீதி. 21:31)

**25** அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார். (ஏசாயா 25:8)

**26** நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். (1யோவான் 5:5)

**27** கன்மலையின் தேனினால் உன்னை திருப்தியாக்குவேன். (சங்கீதம் 81:16)

**28** ....ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை.(வெளி.2:11)

**29** ஆசீர்வாதமான மழை பெய்யும். (எசேக்கியேல் 34:26)

**30** வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பாராக.(சங்கீதம் 134:3)

**31** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். (1கொரி.15:57)

# S.J.SAVES TRUST

## (நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை)

**இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்,
அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும்
தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். மத்.18:10**

கடந்த மே மாதம் 23, 24, 25 ஆகிய தேதிகளில் S.J.SAVES TRUST மூலம் கோடைகால இலவச பயிற்சி முகாம் நடைபெற்றது. நமது டியூஷன் சென்டரில் படிக்கிற சுமார் 300 பிள்ளைகள் இதில் கலந்துக்கொண்டு பயன் அடைந்தனர். அவர்களுக்கு ஆங்கில பயிற்சி, நடனம், பாட்டு பயிற்சி, வாழ்க்கை கலை, ஓவிய கலை ஆகிய பயிற்சிகள் அனைத்தும் திறமையான ஆசிரியர்களைக் கொண்டு கற்றுத்தரப்பட்டது.

பயிற்சியில் பங்குக்கொண்ட பிள்ளைகள் அனைவருக்கும் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் பரிசுப்பொருட்களை (Toys, Gifts) வழங்கினார்கள். அத்துடன் மதிய உணவாக பிரியாணி, வடை பாயாசம், இனிப்பு வகைகள் தரப்பட்டது.

இந்த பணிக்கு உதவிசெய்கிற அன்பு பங்காளர்களை நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறோம். அவர்களுக்கு எங்களுடைய நன்றியை அன்போடு தெரிவிக்கிறோம்.









# உலக செய்திகள்






கெட்டமைன் (Ketamine) என்ற பெயரைக் கேட்டவுடன் ஏதோ ஒரு மருந்து போல என தோன்றலாம். ஆனால் இது இப்போது உலகளவில் பேசப்படும் ஒரு சர்ச்சைக்குரிய பொருளாக மாறியுள்ளது. முதலில் மயக்க மருந்தாகப் பயன்பட்ட இந்த மருந்து, இப்போது மனநல சிகிச்சை முதல் பொழுதுபோக்கு பயன்பாடு வரை பல தளங்களில் கவனம் பெறுகிறது. குறிப்பாக உலகின் மிகப்பெரிய பணக்காரர்களில் ஒருவரான எலான் மஸ்க்கின் கெட்டமைன் பயன்பாடு பற்றிய செய்திகள் இதன் முக்கியத்துவத்தை மேலும் உயர்த்தியுள்ளன.

## கெட்டமைன் என்றால் என்ன?

கெட்டமைன் ஒரு மயக்க மருந்து. இது முதலில் 1960-ல் விலங்குகளுக்கு மயக்க மருந்தாகப் பயன்படுத்தப்பட்டது. பின்னர் 1970-ல் அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் (FDA) இதை மனிதர்களுக்கு ஒரு மயக்க மருந்தாகப் பயன்படுத்த அனுமதித்தது. இது ஒரு "வேறுபடுத்தி மயக்க மருந்து" (Dissociative Anesthetic) என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் இது உடலில் வலியை உணராமல் தடுப்பது மட்டுமல்லாமல் மனதை உடல் மற்றும் சுற்றுச்சூழலிலிருந்து தற்காலிகமாக பிரிக்கிறது.

கெட்டமைனின் முக்கிய பண்பு இது சுவாசத்தை பெரிதாக பாதிக்காமல் இருப்பது. இதனால் அவசர மருத்துவ சூழல்களில் குறிப்பாக போர் மருத்துவத்தில் இது பரவலாகப் பயன்படுத்தப்பட்டது. 2000-ல் கெட்டமைன் மன அழுத்தம், கவலை மற்றும் பிற மனநல கோளாறுகளுக்கு சிகிச்சையாக பயன்படுத்தப்படுவது குறித்த ஆய்வுகள் தொடங்கின. 2019-ல் FDA-ன் ஒரு பகுதியான எஸ்கெட்டமைன் (spravato) என்ற மூக்கு வழி ஸ்ப்ரே மருந்து, சிகிச்சைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மன அழுத்தத்திற்கு (Treatment – Resistant Depression) அங்கீகரிக்கப்பட்டது

# திருமண தடை நீங்கியது!



எங்கள் மகளுடைய திருமணத்திற்காக மாப்பிள்ளை பார்த்து வந்தோம். மகளுக்கு பிடித்திருந்தால் மாப்பிள்ளைக்கு பிடிக்காது. மாப்பிள்ளைக்கு பிடித்திருந்தால் மகளுக்கு பிடிக்காது. இந்த நிலையில் மகளுடைய திருமண காரியம் சில ஆண்டுகளாக தடையாகவே இருந்தது. அதனால் வேதனையுடன் இருந்தோம். கடந்த ஜனவரி மாதம் திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு வந்திருந்தப்பொழுது Rev.Dr.A.ஜாஷ்வா அவர்களிடம் என் மகளுடைய திருமணத்திற்காக ஜெபியுங்கள் என கேட்டுக்கொண்டேன். உடனே பாஸ்டர் மகளுடைய திருமணத் தடை நீங்க பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். கர்த்தர் அதிசயம் செய்தார். அதன்பின் துபாயில் வேலை செய்கிற ஒரு வரன் வந்தது. அந்த வரன் மகளுக்கு பிடித்தமாயிருந்தது. 2025 மார்ச் மாதம் 2-ம் தேதி மகளுடைய திருமணம் தேவ ஆசீர்வாதத்துடன் சிறப்பாக நடைபெற்றது. கர்த்தரை மகிமைப்படுத்தி என்னுடைய எளிய காணிக்கையை ஊழியத்திற்கு தருகிறேன். தேவனுக்கே ஸ்தோத்திரம்.

திரு. சந்தியாகு, திண்டுக்கல்.

## அன்பரின் ஆறுதல் தொலைக்காட்சி நிகழ்ச்சி நேரங்கள்

**தமிழில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

NAMBIKKAI TELEVISION

**சனி, ஞாயிறு**

**8:30PM to 9:00PM**

**தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

AARADANA TV

**வியாழன், வெள்ளி**

**7:00PM to 7:30PM**

## விடுதலையின் ஆசீர்வாத ஆராதனை

**ஞாயிறு தோறும் காலை 9:30 மணி - 11:30 மணி**

அபிஷேகம் நிறைந்த பாடல்கள், ஆவிக்குரிய தேவ செய்தி,
உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்

எந்தவிதமான வேறுபாடுமின்றி அனைவரும்
இவ்வாராதனையில் பங்கு பெறலாம்.

டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி - 18
தொடர்புக்கு : 99421 66066



## நாகர்கோவிலில் அற்புத குடும்ப ஆசீர்வாத கூட்டம் மற்றும் விடுதலையின் ஜெபம்

ஆகஸ்ட் 15
வெள்ளிக்கிழமை
(அரசு விடுமுறை)

காலை 9:30 மணி முதல்
மதியம் 2:00 மணி வரை

SGS டிலைட் ஹால்,
பெதஸ்தா காம்ப்ளக்ஸ் மற்றும் விஜயதா
ஹோட்டல் அருகில்,
WCC ரோடு, நாகர்கோவில்.



தேவ செய்தி : Dr.ஆனந்த ஸ்திரா, Mrs.மார்கிரேட் ஸ்திரா

தொடர்புக்கு : 94888 45627, 8220317472

## திருச்சியில் விடுதலையின் இரவு

ஆகஸ்ட் 16
சனிக்கிழமை
(அரசு விடுமுறை)

LIVE STREAMING
my deliverance church

நேரம் : மாலை 6:00 மணி முதல்
இரவு 8:30 மணி வரை

இடம் : டெலிவரன்ஸ் சர்ச்,
அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10-வது குறுக்குத் தெரு, மேற்கு விஸ்தரிப்பு,
தில்லைநகர், திருச்சி-18



தேவ செய்தியாளர்கள்
Rev. Dr. A. ஜாஷ்வா & குடும்பத்தினர்

தொடர்புக்கு : 99421 66066 & 94888 45627

பரவசமூட்டும் ஆராதனை அனல் பறக்கும் தேவவார்த்தை
விடுதலையின் ஜெபம்

1. கூட்டத்தில் பங்குபெறுகிற அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்படும்
2. my deliverance church youtube channel வாயிலாக விடுதலைப் பெருவிழாவை நேரலையிலும் பார்த்து பயனடையலாம்.
3. வியாதி, சத்துரு போராட்டம், கடன் பாரம், வேலை இல்லாமை மற்றும் பல்வேறு பிரச்சனைகளினால் துயரப்படும் மக்களுக்காக சிறப்பு பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்.